குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.69/2021

எ.ம.சா. 2

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ம் தேதி புதன் கிழமை எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அய்யப்பன் | தொழில் | |
| தந்தை பெயர் | சதாசிவம் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.12 மணி,

Complainant Sakthivel absent. Petition u/s 279 BNSS filed and allowed. Advocate Mr.P.Soundarrajan present for Complainant. Accused Jayaraman present. Advocate Mr.Thailappan present for Accused.

**முதல் விசாரணை :**

1) நான் SBI Bank ஸ்ரீரங்கபாளையம் கிளையில் வங்கி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆஜர் எதிரியின் 01.01.2018 முதல் 31.12.2019 வரையிலான வங்கி கணக்கு பரிவர்த்தனை பட்டியலை தாக்கல் செய்கிறேன். **அது எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி எ.ம.சா.ஆ.4 ஆவணத்தில் ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் 21.06.2018 ம் தேதி ரூ.7,64,109/– என்ற பணப்பரிவர்த்தனை பெறப்பட்டுள்ளது. 12.09.2018 ம் தேதி ரூ.1,91,027/– கருவூல அலுவலகத்தில் இருந்து பணப்பரிவர்த்தனை பெறப்பட்டுள்ளது. அனைத்து மாத இறுதி நாட்களிலும் ஆஜர் எதிரியின் சம்பளம் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

2) எ.ம.சா.ஆ–4 ஆவணத்தின் படி 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் மட்டும் ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் ரூ.41,88,298/– பணப்பரிவத்தனை மூலம் பெறப்பட்டுள்ளது. 24.09.2018 ம் தேதி ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் இருந்து ரூ.50,000/– ம் அனுப்பப்பட்டுள்ளது. யாருடைய பெயருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று குறிப்பிடவில்லை. Refference Number மட்டும் இருக்கிறது. அதை வைத்து யாருக்கு அனுப்பியுள்ளார் என்று எடுக்க முடியும், அந்த பணம் திருப்பப்படவில்லை. அவ்வாறு திருப்பப்பட்டு இருந்தால் ஓரிரு நாட்களில் வங்கி கணக்கிற்கு திரும்பி வந்து இருக்கும்.

3) 19.09.2018 ம் தேதி ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் இருந்து ரூ.50,000/– அனுப்பியுள்ளார். மேற்படி தொகை அன்றைய தேதியிலேய திருப்பப்பட்டுவிட்டது. ஆஜர் எதிரி 27.09.2019 ம் தேதியிட்ட ஒரு கடிதத்தை

அவருடைய காசோலையை Stop Payment செய்வதற்காக அனுப்பினார். அந்த காசோலை எண் 794476 என்றால் சரி. Stop Payment கொடுக்காமல் இருந்திருந்தால் காசோலை பரிவர்த்தனை செய்து பணமாக்கப்படும்.

4) காசோலை தொலைந்துவிட்டால் அந்த காசோலையை பரிவர்த்தனை செய்யாமல் இருக்க Stop Payment கொடுப்பது தீர்வாகும். ஆஜர் எதிரி தகவல் அறியும் உரிமை சட்டப்படி 24.02.2022 ம் தேதி அன்று கணக்கு எண் தொடங்கப்பட்ட தேதி, காசோலை எண் 784451 முதல் 794500 வரை உள்ள காசோலைகள் எந்த தேதியில் வசூலுக்கப்பட்டது என்றும், 784451 முதல் 794500 வரை உள்ள காசோலைகள் எந்த தேதியில் Stop Payment செய்யப்பட்டது என்ற விபரங்களை கூறியிருந்தார்.

5) காசோலை எண் 794476 வசூலுக்காக எங்களது வங்கிக்கு வரவில்லை. மேற்படி காசோலை எந்த வங்கியில் பணபரிவர்த்தனைக்காக வசூலுக்கு போடப்பட்டது என்ற விபரம் manual ஆக தகவல் வராது, Centralized System ல் பதிவாகி இருக்கும். அழைப்பாணையில் 4 வதாக குறிப்பிடப்பட்டுள்ள 794476 என்ற காசோலை எந்த வங்கியில் செலுத்தி எனது வங்கிக்கு வசூலுக்காக அனுப்பப்பட்டள்ளது என்ற விபரம் அடங்கிய ஆவணத்தை எடுத்து வரவில்லை. ஆனால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். காசோலை எண் 794476 30.09.2019 தேதியில் Stop Payment செய்யப்பட்டது.

அழைப்பாணையில் 4 வதாக குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை சமர்ப்பிக்கப்படுவதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி 18.09.2025 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.57 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.